1969 ஆகஸ்ட் 19]

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, உய்ய கொண்டான் ஆற்றில் கழிவுநீர் ஓடுவதுபற்றி அமைச்சர் அவர்களுக்கு ஏதேனும் குறிப்பு வந்ததா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தனிக் கேள்வி போடவும்.

மேல் பெரியாறு அணை

* 28 வி௫.—**திரு. எஸ். அக்னிராஜு:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் பெரியாறு அணைக்கட்டின் மேற்கே மேல் பெரியாறு அணை அமைக்கும் திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எந்த அளவில் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் பெரியாறு, வைகை அணை தவிர, வேறு அணை கட்ட அரசாங்கத்திடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா ? சில மாதங்களுக்கு முன்னர் அமைச்சர் அவர்கள் சென்று பார்த்து வந்தார்கள். அதைப்பற்றிய விவரம் தெரிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதைப்பற்றிய குறிப்பு ஒன்றும் தற்போது என்னிடம் இல்லை.

கோவிலார்-பெரியாறு அணை

* 36 வி௫.—**திரு. எம். சுரேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் ஜில்லாவில் கோவிலார்-பெரியாறு (பிளவக்கல்) அணைக்கட்டு திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(இ) இதற்காகும் செலவுகளுக்கு மதிப்பிடப்பட்டு திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கிறதா ?

(உ) இது எப்பொழுது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) ஆம்.

(உ) இத்திட்டத்திற்கு தொழில் நுட்ப வகையில் ஒப்புதல் அளிக்கும்படி மத்திய நீர்பாசன மின்சார ஆணைக்குழுவுக்கு எழுதப்பட்டுள்ளது.